**நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.**

**இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.**

*K.S. பாலச்சந்திரன்*

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்...

ஆழத்து முத்துக்கள் 26

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

# நவரச நாயகன் 'அடங்காப்பிடாரி' என்.ரி. குணம்

அறுபதுகளின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு இலங்கையின் பட்டி தொட்டியெல்லாம் 1500 தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்டு அனைவரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த 'அடங்காப்பிடாரி' நாடகத்தில் வரும் சவர்க்காரக்காரி கோகிலாவை யாரும் இலகுவில் மறந்திருக்கமுடியாது.

அந்நாளில் அழகான பெண்கள் யாழ்ப்பாண வீதிகளில் வீடுவீடாகச் சென்று அழகுசாதனப் பொருட்கள் விற்பதும் விளம்பரம் செய்வதும் வாடிக்கையாக இருந்தது. கட்டையாக உடையணியும் இவ்வாறான ஒரு பெண்ணை மையமாக வைத்து எழுதப்பட்ட நாடகம் தான் அடங்காப்பிடாரி. இப்பெண்ணைக் காதலிக்க விரும்பும் ஒரு கிராமத்தான் தான் ரஷ்யா சென்று படித்துவிட்டு வந்ததாக ரொக்கற் விட உண்மை தெரிந்து பின் சவர்க்காரக்காரியிடம் விளக்குமாற்றால் அடி வாங்கும் அந்தக் காட்சியில் மண்டபம் சிரிப்பால் அதிரும்.

சுண்டுக்குளி கனகையா அவர்களின் யாழ். நாடக மன்றத்தின் "அடங்காப்பிடாரி" நாடகத்தின் ஆரம்பத்தில், கோகிலா பாத்திரத்தை நடித்தவர் வெளியூர் சென்றுவிட, அதனது 110வது மேடையேற்றத்திலிருந்து 1500வது மேடைவரை இப்பாத்திரத்தை ஏற்று நடித்தவர் யாட்டு விழாவினர் "அடங்காப்பிடாரி" போட வேண்டும் என்று அடம்பிடிக்க இரு நாளில் பழகி நடித்த பாத்திரம் தான் இந்தக் கோகிலா.



இவ்வாறு இப்பாத்திரம் மூலம் இலங்கை எங்கும் அறியப்பட்ட என்.ரி. குணம் அவர்களின் ஆரம்ப காலத்தையும் ஏனைய பக்கத்தையும் இனிப் பார்ப்போம்.

தனது 13வது வயதில் அரியாலை திருமகள் நாடக மன்றத்தின் "விதியின் விளையாட்டு" என்ற நாடகத்தில் பெண் வேடமேற்று முதன் முதலாக நாடக உலகுக்கு அறிமுகமானார். அன்று முக அலங்காரம் எவ்வாறு செய்வது என்பதை நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தைச் சேர்ந்த கலைஞர் அருள் அவர்களும், சேலை உடுத்துக்கொள்வதை அக்கால நடன (சின்னமேளக்) குழுவைச் சேர்ந்த சரஸ்வதி என்ற பெண்ணும் இவருக்குப் பழக்கியிருந்தனர். அன்றிலிருந்து இன்றுவரை தானே அலங்காரம் செய்துகொள்வது இவரது நாடக வழக்கமாகும். மேலும் சக கலைஞர்களுக்கும் அலங்காரம் செய்வதைக் கலையாகக் கொண்டுள்ளார்.

அரியாலை திருமகள் நாடக மன்றத்தின் பிரபல நாடகாசிரியர் க. நேமிநாதன், பெண் வேடமிடும் எஸ்.மயிலு மற்றும் எமது கலைஞர் என்.ரி.குணம் ஆகிய மூவரும் சேர்ந்து பல வெற்றி நாடகங்களை உருவாக்கினர். வடமாகாண ரீதியாக நடாத்தப்பட்ட பல நாடகப் போட்டிகளில் இவர் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்த 'இரு ஜீவன்கள்', 'பாவத்தின் பரிசு', 'வெண்ணிலா' போன்ற நாடகங்கள் முதற் பரிசை வென்றன.

இவருக்குப் புகழ் சேர்த்த நாடகங்களாக அரியாலை சனசமூக நிலைய ஆண்டு விழாக்களில் மேடையேறிய 'ஆலமரம்', 'பொலிஸ் காரன் மகள்', 'கந்தன் கருணை', 'திருவிளையாடல்' என்பனவும், அரியாலையூர் பொ.சண்முகலிங்கம் அவர்களுடன் இணைந்து நடித்த 'ஒதெல்லோ', 'கர்ணன்', 'மயானத்தில் மன்னன்' போன்றனவும் குறிப்பிடப்பட வேண்டியவை.

மேலும் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நாடகங்கள் பலவற்றில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்துள்ளார். தவிர, அரியாலை திமர் நாடக மன்றத்தின் மகிழ்வூட்டும் நாடகங்களான 'வெளிக்கிட்டி விசுவமடுவுக்கு', 'உடையாரின் உபத்திரவம்', 'சுழலும் சுந்தரி' ஆகியவற்றிலும் பாத்திரங்கள் ஏற்றிருந்தார்.

இவ்வாறு பெண்வேடங்களே ஏற்று வந்த கலைஞர் என்.ரி. குணம் அவர்கள் ஒரு கட்டத்தில் ஆண் பாத்திரங்களை ஏற்று நடித்து எம்மையெல்லாம் ஆச்சரியப்பட வைத்தது இன்றும் நினைவில் இருக்கிறது.

அது சந்திரகுப்தன் அரண்மனை. சாணக்கியனாக குணம் அவர்கள். "இது சாபமல்ல, சபதம். சாணக்கியனின் சபதம். சபதத்தை முடிக்கும் வரை அவிழ்ந்த இந்தக் கூந்தலை முடியமாட்டேன்" (சாணக்கியன் அக்கால வழக்கில் குடுமியுள்ளவர் என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள்) என்று நிலத்தில் அடித்து அவர் கர்ஜிக்கும் அந்தக் காட்சி பார்வையாளர்களை உறையச் செய்தது.

இதன் பின்னர் மாலிக்கபூர், கண்டியரசன், கட்டப்பொம்மன், அப்பர் போன்ற பாத்திரங்களை ஏற்று அப்பாத்திரங்களாகவே மாறியிருந்தார்.

தற்போது பிரான்சில் வாழ்ந்து வரும் இவர், பிரான்ஸ் திருமறைக் கலாமன்றத்தில் தன்னை இணைத்துக் கொண்டு 'பலிக்களம்' போன்ற சமய நாடகங்களில் பங்கேற்று வருகிறார். இவரது கலைச் சேவையைப் பாராட்டி திருமறைக்கலாமன்றம் இவருக்கு நவரச நாயகன் - நடிப்புலக வித்தகன் என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளது. இந்நாட்களில் இவர் அடங்காப்பிடாரி நாடகத்தை புதிய கலைஞர்களுடன் சேர்ந்து பிரான்ஸ், சுவிட்சலாந்து, ஜேர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் மேடையேற்றியது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக்கலைஞனின் கலையார்வத்திற்கு ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடலாம். யாழ்.வல்வை உதயசூரியன் கழகத்தின் 10வது ஆண்டுவிழா நாடகப் போட்டியில் இவர் பிரதான பாத்திரம் ஏற்று நடித்த பாவத்தின் பரிசு நாடகம் இறுதிப் போட்டிக்குத் தெரிவானது. போட்டிக்கு இரு நாட்கள் இருக்கும் போது இவர் காதலித்துத் திருமணம் செய்து கொண்ட துணைவியார் மகப்பேறின் போது இறந்துவிட்டார். நாடகத்தை ரத்து செய்ய மற்றவர்கள் முடிவெடுத்த போது "கவலை ஒருபுறம் இருக்கட்டும். கலைதான் எனக்கு முக்கியம்" என்று நடித்து முடித்ததோடு நாடகம் பரிசு பெறவும் செய்தது. இவர் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம்.

இன்னமும் இரு வருடங்களில் நாடக உலகில் பொன்விழா காணவிருக்கும் இந்தக்கலைஞன் உயிரூட்டிய பாத்திரங்களை ஈழத்து நாடக உலகம் என்றும் நினைவில் வைத்திருக்கும்.



sriskanthan.p@thaiveedu.com

தான் என்.ரி. குணம் அவர்கள்.

பொன்நிற மேனி. சந்திர பிம்பம் போன்ற முகம். பெண்களே பொறாமைப்படும் அளவுக்கு காந்தர்வ அழகு. காதல் காட்சிகளில் அவரது நடனமும், நளினமும் பின்னி எடுக்கும்.



யாழ்.நாடக மன்றத்தின் "கி.பி. 2000" என்ற நாடகம் பழகப்போனவருக்கு அடம்பன் கனியாட்டு விழாவினர் ...

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

**இணையத்தளத்திலும் 'தாய்வீடு'**
**www.thaiveedu.com**